**திரு. பெ. குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித்தலைவர்,
வேலூர் மாவட்டம்.

| | |
|---|---|
| தொலைபேசி எண் | : 0416-2252501, 2253512 (அ) |
| | : 2253516, 2252752 |
| தலைமையகம் | : 0416 - 2252345 |
| இல்லம் | : 0416 - 2222000 |
| நிகரி : அலுவலகம் | : 0416 - 2253034 |
| இல்லம் | : 0416 - 2228029 |
| செல் | : 9444135000 |
| மின் அஞ்சல் | collector.tnvlr@nic.in |




# என் அன்புள்ள குழந்தைகளுக்கு அண்ணனின் அன்பு மடல் !

அன்புத் தம்பி / தங்கையே !

நமது மாவட்டத்திலுள்ள அனைத்து குழந்தை செல்வங்களாகிய உங்களுடன் நேரில் பேசிட ஆவல், ஆனால் அதற்கான கால அவகாசம் இல்லாத காரணத்தினால் இக்கடிதம் மூலம் உங்களது பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பற்றிய கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்துக்கொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் **வாழும் உரிமை, வளர்ச்சிக்கான உரிமை, பாதுகாப்பு உரிமை மற்றும் பங்கேற்கும் உரிமைகள்** உள்ளன.

**“நவம்பர் 14ஆம் தேதி குழந்தைகள் தினமான”** இன்று அனைத்து குழந்தைகளுக்கும் என்னுடைய மனமார்ந்த குழந்தைகள் தின நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் விளையாட்டு உங்களின் அடிப்படை உரிமை என்பதால் வளர்ச்சிக்கான விளையாட்டு என்பது உங்கள் விளையாட்டின் ஆற்றலையும் உங்கள் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், சமூக, கல்வி மற்றும் தலைமைத்துவ திறன்களை வளர்க்கவும் விளையாட்டுகள் உதவும் என்பதை நீங்கள் தெரிந்துக்கொள்ள வேண்டும். மேலும் போதை பொருட்கள் உடல்நலத்திற்கு கேடு விளைவிப்பதோடு உயிர் இழப்புகளும் ஏற்படுத்தும் என்பதை நீங்கள் முழுமையாக அறிந்து உங்களது குடும்பத்தினரையும், நண்பர்களையும் சமூதாயத்தினரையும் போதை பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களை நல்வழிப்படுத்த கேட்டுக்கொள்கிறேன். மேலும் உங்களின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு என்பது இந்நாட்டின் வளர்ச்சிக்கு மிக முக்கிய அடிக்கல் என்பதால் இது குறித்து உங்களுக்கும், நீங்கள் மற்றவர்களுக்கு உதவிடும் வகையில் சில ஆலோசனைகளை கூறவுள்ளேன்.

குழந்தைகளாகிய நீங்கள் என்றும் மூத்தோர் சொல் நல்வழிகளைக் கடைபிடித்து செயல்படுதல் வேண்டும். கல்வி, ஒழுக்கம் போன்றவற்றில் சிறந்து விளங்கியும், தீய சக்திகளிடமிருந்து விலகி நின்றும் உங்களையும், உங்கள் குடும்பம் மற்றும் தேசத்தின் நலனைக் காக்க வேண்டும்.

குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் நம் மாவட்டத்தில் குழந்தை திருமணம் தடுத்தல் பற்றிய விவரங்களை தெரிந்து கொள்வது மிக அவசியமாகும். இதன்படி **18 வயது பூர்த்தியடையாத பெண் குழந்தைக்கும், 21 வயது பூர்த்தியடையாத ஆணுக்கும்** திருமணம் நடத்தி வைப்பது, திருமணம் ஏற்பாடு செய்வது, வற்புறுத்துவது போன்ற செயல்கள் குழந்தைத் திருமணம் என்றும், தண்டனைக்குறிய செயல் எனவும் **குழந்தைத் திருமணம் தடுப்பு சட்டம், 2006** வலியுறுத்துகிறது. எனவே இதிலிருந்து உங்களையும், உங்கள் நண்பர்களையும் பாதுகாத்துக் கொள்ள **சைல்டுலைன் 1098** அழைத்து உதவிக்கேளுங்கள்.

மேலும், குழந்தைத் தொழிலாளர்கள், ஆதரவற்ற குழந்தைகள், பிச்சையெடுக்கும் குழந்தைகள், கொடுமைக்கு இரையாகும் குழந்தைகள், வீட்டை விட்டு ஓடிப்போகும் குழந்தைகள், காணாமல் போகும் குழந்தைகள், பள்ளி செல்லா/பள்ளி இடைநின்ற குழந்தைகள், கடத்தப்படுகின்ற குழந்தைகள், பாலியல் ரீதியாக பாதிக்கப்படும் குழந்தைகள் போன்ற பிரச்சனைகளில் தவிக்கும் குழந்தைகளுக்கு உதவிட **சைல்டுலைன் 1098** என்ற எண்ணை அழைக்கவும்.

நமது வேலூர் மாவட்டத்தில் உங்களுக்காக உதவி செய்ய நானும், குழந்தைகள் நலன் மற்றும் பாதுகாப்பு சார்ந்த அலுவலர்களும் இருக்கின்றோம். உங்களுக்காக உதவும் மாவட்ட அலுவலர்கள் சிலரின் தொலைபேசி எண்களை பதிவிட்டுள்ளேன். உதவி தேவைப்படும்போது இந்த எண்களை பயன்படுத்திக்கொள்ளுங்கள். மேலும் நமது மாவட்டத்தை குழந்தை நேயமிக்க மாவட்டமாக மாற்றிட அனைவரும் ஒன்றினைவோம்.

| | |
|---|---|
| **சைல்டுலைன் இலவச தொலைபேசி எண்** | : 1098 |
| **மாவட்ட சமூக நல அலுவலர்** | : 0416 - 2252663 |
| **மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்** | : 0416 - 2222310 |
| **மாவட்ட குழந்தைகள் நல குழு** | : 04172 - 278175 |
| **சைல்டுலைன் அலுவலகம்** | : 9381875448 |

குமாரவேல் பாண்டியன்

**பெ.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர்

**குழந்தைகள் நலன் கருதி வெளியிடுவோர்**

HAND IN HAND INDIA
ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியா

CHILD LINE 1098

unicef